## பேராசிரியர் இலக்குவனாரின் கனவுகள் நனவாக...

1. மதுரையில் பல்கலைக் கழகம் அமைக்கும்பொழுது அதற்குத் திருவள்ளுவர் பெயர் சூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி னார். போக்குவரத்துக் கழகத்தில் இருந்த திருவள்ளுவர் பெயரையும் எடுத்து விட்டமையால் பல்கலைக் கழகம் ஒன்றிற்குத் திருவள்ளுவர் பெயரைச் சூட்ட வேண்டும்.
2. வள்ளுவர்க் கோட்டம் போன்று தொல்காப்பியர்க் கோட்டம் அமைக்க வேண்டும்.
3. பல்கலைக் கழகங்கள் தொல்காப்பிய ஆய்வுரைகள் வெளியிட வேண்டும்.
4. இந்தி எதிர்ப்புப் போரில் உயிர் நீத்தவர்களுக்காக 'மொழிப் போர் வீரர்கள் நினைவுச் சின்னம்' உருவாக்க வேண்டும்.
5. தமிழ்மொழி, தமிழ் இலக்கியச் சிறப்பு ஆகியவற்றைத் தமிழ் மக்களும் அயலவரும் அறியச் செய்யும் 'தமிழ்ப் பரப்புக் கழகம்' அமைக்க வேண்டும். (தமிழ்க் காப்புக் கழகம் நிறுவிய பேராசிரியர் இலக்குவனார் இறுதிக் காலங்களில் தமிழ்ப் பரப்புக் கழகம்' அமைக்க வலியுறுத்தி வந்தார்)
6. தமிழை நடுவணரசின் ஆட்சி மொழியாக்க வேண்டும்.
7. தமிழ் நாட்டில் பயிற்று மொழி, கலைமொழி, அலுவல் மொழி, நீதிமன்ற மொழி, ஆலய மொழி, ஆட்சி மொழி எனத் தமிழே வீற்றிருக்கக் கட்டாயச் சட்டம் கொண்டு வரவேண்டும்.
8. தகவல் தொடர்பு ஊடகங்கள் தமிழ்க் கொலை புரிவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.
9. நல்ல தமிழில் இதழ்கள் நடத்துவோருக்குப் பேராசிரியர் இலக்குவனார் பெயரில் விருதுகள் வழங்கப் பெற வேண்டும்.

தமிழ் இயக்கத் தளபதி இலக்குவனாரின் 90—ஆம் பிறந்த நாள் வெளியீடு

**த. தமிழ்த்தென்றல்,** பொறுப்பாளர்
பாவாணர் தனித்தமிழ்ப் பயிற்றகம்
தமிழ்க்குடில் — கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர்—613 002.
தொலைபேசி எண். 04362-52381

# தன்மானத் தமிழ் மறவர் இலக்குவனார்



*மான மறவர் இலக்குவனார் — குறள்*
*மல்கிப் பெருக்கிடும் வேட்கையினார்*
*ஈனம் கருக்கும் எரியனையார் — கொடும்*
*எத்தர் நடுக்கும் புலியனையார்*
*காணும் இடத்தைத் தமிழியக்கக் — களம்*
*காணவே மாற்றும் புயலனையார்*
*நாணம் என அஞ்சல் இல்லாமலே — தமிழ்*
*நாயகர் சீரினைப் போற்றுங்கடி!*

- கலைமாமணி அரிமதி தென்னகன் (தமிழியக்கக் கும்மி)

## இலக்குவனார் புகழ் வளர்க, வாழ்க!

நலக்குறைவு தமிழுக்கு வரக்கூடா தென்ற
நினைவோடு வாழ்ந்திருந்த பெருமகனார்; மேனி
பலக்குறைவு கண்டாலும், தமிழ்ப்பாது காப்பைப்
பேணுகின்ற கழகமொன்று கண்டஅறி வாளர்;
கலக்கிடுவார் தமிழ்த்தாயைப் பழிப்பாரை; மேலும்
'குறள் நெறி' என் றோர்ஏடும் நடத்திவந்தார் எங்கள்
இலக்குவனார்; தஞ்சைவள நாடீந்த செம்மல்
ஈரோட்டுப் பாதையிலே நடந்ததமிழ் மேதை!

தமிழ்இலக்கி யத்தில்கரை கண்டபுகழ் கொண்டார்!
திருவெறும்பூ ரில்,பெரியார் ஈரோட்டில் எல்லாம்
தமிழ்ப்பேரா சிரியர்பணி புரிந்துவந்தார்; பின்னர்,
தென்பாண்டி மதுரை,நாகர் கோயிலிலே எல்லாம்
அமைந்துள்ள கல்லூரி களில்திகழு கின்ற
அரியதமிழ்த் துறைத்தலைவர் பொறுப்பேற்றார்; தாயாம்
தமிழ்அழிய இந்திவர விடமாட்டேன் என்ற
திடமனத்தால் பலவழக்கைச் சந்தித்தார்; வென்றார்!

முனைவர்பட்டம் பெற்றஇவர் தலைநகராம் சென்னை
மாநிலக்கல் லூரியிலே தமிழாசான் ஆனார்;
தளைவளரச் செய்திட்ட தமிழ்வளர்க்க வேண்டித்
'தமிழ்உரிமைப் படை'அமைத்துக் கைதான துண்டு!
கனைகடல்போல் முழங்குதமிழ்ப் பேச்சாள ரான
கலைஞர்,திரு வாரூரில் இவர்நன்மா ணாக்கர்!
'எனைவெல்வார் யாருமில்லை' எனும் கர்வம் இல்லை;
இருந்ததெல்லாம் நெடுந்தோற்றம்; நீள்சதுர மீசை!

வாழ்வாங்கு வாழவேண்டும் தமிழ், தமிழர் என்னும்
மேலான நோக்குடைய இலக்குவனார் உள்ள
கீழ்த்திசைநா டுகளோடு மலேசியாசிங் கப்பூர்க்
கெல்லாம்போய்த் தமிழில்சொற் பொழிவாற்றி வந்தார்;
ஆழ்புலமை மிக்கார்; இலக்கணத்தில் நல்ல
ஆற்றலாளர்; மொழிஇயல்ஆய் வாளர்இவர் ஆவார்!
வீழ்ந்தமிழ் நாட்டவரைத் தலைநிமிரச் செய்த
பெரியாரின் சீடர்இவர்; புகழ்வளர்க; வாழ்க!

பாவலர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

நன்றி: 'மீண்டும் கவிக்கொண்டல்' நவம்பர் 2000



# தன்மானத் தமிழ் மறவர்

# இலக்குவனார்

- தஞ்சை நாடன் -

''தமிழ் வீறு கொண்டு வாழ வேண்டும் பெருமையுடன் வாழ வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர். அவர் தயாரித்தவர்களெல்லாம் மாணவர்கள் என்று சொல்வதைவிட அழுத்தம் திருத்தமான போர்வாட்களைத் தான் அவர் தயாரித்தார் என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும். எனக்குத் தன்மானத்தைக் கற்றுத் தந்தவர் அவர்'' என மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

''மறைமலை அடிகளாரின் துணிவும், நாவலர் பாரதியாரின் உரமும், தமதெனக் கொண்டு எத்தகு இன்னலையும் துச்சமென ஏற்றுத் தமிழே தமது மூச்செண உயிர்த்து வாழ்ந்த செம்மல்'' என, இனமானப் பேராசிரியர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

அவர்தாம் 20 ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர் என்றும், 20 ஆம் நூற்றாண்டு நக்கீரர் என்றும் தமிழ் உலகத்தவரால் பாராட்டப் பெறுபவர் - தமிழ்க்காப்புத் தலைவர், இலக்கணச் செம்மல் செந்தமிழ் மாமணி பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார்.

அவர் கண்ட கனவுகள் இன்னும் நனவாகாமல் இருந்தாலும் நனவுப்பாதையை நோக்கி நடைபோடும் எழுச்சியைப் பெற்றுள்ளன என்பதில் ஐயமில்லை. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' எனக் காலமெல்லாம் வாழ்ந்த அவர் தமிழ்ப் பயிற்று மொழிக்காகத் தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம் மேற்கொண்டு சிறை சென்றதை

யாவரும் அறிவர். தமிழ் முழுமையான கல்விமொழி என்னும் நிலைமை அடைந்தால்தான் அவர் சிறை சென்றதற்கு ஒரு பொருளுண்டு.

இந்தியத் துணைக்கண்டம் மொழிவழிக் கூட்டரசுகள் இணைந்த இந்திய ஐக்கிய நாடுகளாகத் திகழ வேண்டும் என அவர் எழுதியும் பேசியும் வந்தார். இன்றைக்கு இந்திய அரசியலில் இக்கருத்துதான் முதலிடம் பெற்று வருகிறது என்பதில் ஐயமில்லை.

திராவிடக் கூட்டரசு, சங்க இலக்கியம், குறள்நெறி எனப் பல இலக்கிய இதழ்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தி, இதழ் வழியாகத் தமிழ்த் தொண்டாற்றிய பெருமகனார் அவர். கல்விப் பணியுடன் இதழ்ப்பணி நடத்துவோரில் முன்னோடியாகவும் முதன்மையானவராகவும் திகழ்ந்தவர் அவர். தமிழியக்கச் செய்திகளும் திராவிட இயக்கச் செய்திகளும் செய்தித்தாள்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட பொழுது, அவரின் இதழ்கள்தாம் அவற்றைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிட்டுப் பாரறியச் செய்தன.

"எந்த நாட்டிலும் அரசியல் வெற்றி, ஆட்சி மாற்றம், புரட்சி முதலியவற்றிற்கெல்லாம் தலைவர்களின் கருத்துக்களை மக்களிடம் பரப்பி வேராகவும் உரமாகவும் இருப்பவர்கள் அறிஞர்களே. அந்த வகையில் திராவிட இயக்கங்களின் ஆட்சிக்கு வேராகவும் உரமாகவும் இருந்தவர் பேராசிரியர் இலக்குவனார் எனில் எள்ளளவும் ஐயமில்லை" எனத் திறனாய்வாளர்கள் கூறுவதும் உண்மைதான். 1967க்குப் பின்பு "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்ற பேரறிஞரின் பெருந்தன்மையால் எதிரணியினர் ஏற்றம் பெற்றிருக்கலாம். ஆனால் அதற்கு முன்பு பணியில் இருந்து கொண்டு இன்னலுற்று, இடர்பட்டு, பொருள் இழந்து, உயர்வுகள் இழந்து, வாழ்க்கையையே போர்க்களமாகக் கண்டு வாழ்ந்த தமிழறிஞர் சி. இலக்குவனார் போன்றோர் இல்லையேல் திராவிட இயக்க வெற்றிகள் தள்ளிப் போயிருந்திருக்கும்.



அவரது படைப்புகளிலேயே முதன்மை வாய்ந்தது. தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஆராய்ச்சி உரை எழுதி அவர் வெளியிட்ட முனைவர் பட்ட ஆய்வு நூல்தான். உலக நாடுகளுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா அந்நூலை எடுத்துச் சென்று கொடுத்துப் பேருவகை அடைந்தார். அப்படித்தான் அவர் யேல் பல்கலைக் கழகத்திலும் அதனைக் கொடுத்தார். போப் ஆண்டவரிடமும் கொடுத்தார். தமிழக அரசு இந்நூலை உலகெங்கும் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் மொழி அமைப்புகளுக்கும் அளிக்க வேண்டும். சங்கப் பலகையில் உள்ளவர்களே தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முயன்று வருவதாக அறிகிறோம். புதிய மொழி பெயர்ப்புகள் வருவது நல்ல முயற்சிதான். எனினும் பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்ற பேராசிரியர் இலக்குவனார் நூலையே சங்கப் பலகை ஏற்கலாம்.

பேராசிரியர் இலக்குவனார் பிறந்தநாளைத் தமிழ் எழுச்சி நாளாகக் கொண்டாட வேண்டும். நல்ல இதழ்களுக்கு இலக்குவனார் பெயரில் விருதுகள் வழங்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்ட நூலகங்களுக்கோ திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கோ, பேராசிரியர் இலக்குவனார் பெயரைச் சூட்டலாம். பேராசிரியர் இலக்குவனாரின் நினைவைப் போற்றும் வகையில் நாம் எதுவும் செய்யவில்லையேல் நன்றி மறந்தவராவோம். இலக்குவனார் புகழ் பாடி இன்றமிழ் வளர்ப்போம்.

*– நன்றி :* 'மீண்டும் கவிக்கொண்டல்'
நவம்பர் 2000

> இலக்குவனார் செய்யும் இருந்தமிழ்த் தொண்டை
> விலக்குவான் செய்த வினையே – துலக்கியதே
> ஊழின் வழியதொன் றின்மையால் மற்றொன்று
> சூழினும் முந்துறுஞ் சொல்.
>
> *– மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்*

# ❋ தமிழ்த்தாய் ❋

புலவர்மணி. இரா. இளங்குமரன்

''தமிழ் மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும்'' எனும் உயிர்ப்போடு எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். ''தமிழில் பேசுக! தமிழில் எழுதுக; தமிழில் பெயரிடுக; தமிழில் பயில்க'' என்னும் நான் மணிகளைச் செயற்படுத்தும் செம்மாப்புடன் நான்மாடக் கூடல் திருநகரில் 6.8.62 இல் எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். அதன் தலைவரும் நிறுவனரும், பேராசிரியர் சி. இலக்குவனார். யான் அதன் பொதுச் செயலாளன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், முனைவர் கலைஞரவர்கள், மொழி ஞாயிறு பாவாணரவர்கள், முனைவர் மு.வ. அவர்கள், முனைவர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் முதலாகிய தமிழ் நலம் நாடும் பெருமக்கள் அவ்வப்போது பங்கேற்றுச் சிறப்பித்தனர்!

இந்நாளைப் பேராளர்களும் பெருமக்களுமாகிய நாவரசர் கா. காளிமுத்து, பாவலர் நா. காமராசன், சட்டமன்ற உறுப்பினர் முத்தையா, பேராசிரியர் வீ. முத்துசாமி, பேராசிரியர் முருகபாரதி ஆகியோர், அந்நாளைத் தமிழ்க் காப்புக் கழகத் தூண்கள், உறுப்பாளிகள், அரவணைப்பாளிகள், தொண்டின் உறைப்பாளிகள்!

தமிழ்க் காப்புக் கழகப் பணிகள் சீரியன. இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல் இவற்றில் தேர்ச்சியும், பயிற்று தலில் திறமும், தனித்தமிழ் நாட்டமும் உடைய பேராசிரியர்கள் பதினறுவர் எத்தகு கைச் செலவும் எதிர்நோக்காமல், தமிழூதியமே ஊதியமாகத் தம் கைச்செலவு செய்து கொண்டு வந்து தமிழ்



வகுப்பு நடத்தினர். ஒவ்வொரு நாளும் வகுப்பு; ஒவ்வொரு கிழமையும் பொழிவு; ஒவ்வொரு திங்களும் விழா! அவ்வப்போது அறிக்கைகள், சுவரொட்டிகள் வேண்டுகோள்கள் ஊர்வலங்கள்!

தமிழகத்தின் பல்வேறு பெருநகரங்களிலும் தமிழகங் கடந்து தமிழர் வாழும் பகுதிகளிலும் தமிழ்க் காப்புக் கழகக் கிளைகள் தோன்றி நற்பணியாற்றின. தமிழ்க் காப்புக் கழகம் இந்தியெதிர்ப்புப் பாசறையாக வேண்டிய கட்டாயத்தை 1965 இல் அரசு உண்டாக்கியது. தமிழ்க் காவலராகத் திகழ்ந்த பேராசிரியர் இலக்குவனார் இந்தி யெதிர்ப்புப் படைக்குத் தளபதியானார். அவர்தம் முழக்கத்தை வெளியிடும் போர்ப்பறையாகக் கிளர்ந்தது 'குறள் நெறி' இதழ். அந்நாள் பேராயக் கட்சி ஆட்சியாளர்கள் அஞ்சும் அளவுக்கு நிமிர்ந்து நின்றார் பேராசிரியர். அவரும் அவரைச் சார்ந்து நின்றவர்களும் அரசினர் அலைக் கழிப்புக்கு ஆட்பட்டனர். ஒற்றர் கண்காணிப்புக்கு உட்பட்டு இயங்கும் ஒருநிலை உண்டாயிற்று.

'அமைச்சர்களைக் கொல்லுதற்கு முயற்சி' என்பது முதலாகப் பேராசிரியர் மேல் பதினான்கு குற்றங்கள் சாற்றப் பெற்றன. உறையுளையும் குறள் நெறி அச்சகத்தையும் புலனாய்வு செய்தனர். சில தடயங்கள் உள்ளனவாகக் கூறிப் பொய் வழக்குச் சுவடித்தனர். உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டினை உறுதியாக எதிர்த்தல் தம்கடன் என்று கொண்டு, ஊதியம் நோக்காமல், எவரும் வந்து தம்மை வேண்டிக் கொள்ளாமல் - திருமிகு தருமராக சந்தோசம், திருமிகு பி.எசு. இராமசுப்பிரமணியம் முதலிய வழக்கறிஞர்கள் முப்பத்தாறு பேர் பேராசிரியர்க்காக வழக்காட முன்வந்தனர். எங்கும் காண்டற்கரிய காட்சியாயிற்று.

ஒவ்வொரு கெடுவிற்கும் ஒன்பதின்மரோ பதின்மரோ தத்தம் ஊர்களில் வந்து வழக்காடினர். 'திருநகரை விடுத்து வெளிச் செல்லக் கூடாது' என்னும் ஆணையால் பணிக்களம் முதலிய எவற்றுக்கும் செல்லாவண்ணம் அரசினர் தகைந்தனர். ஒரு திங்களும் ஒரு

கிழமையும் சென்றன. அதன்பின்னர், 'எப்பொழுதும் சிறைப் படுத்தலாம்' என்னும் ஆணையுடன் விடுதலை வழங்கினர். சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய மணிமேகலையார் மாண்பு எங்கே! அறக்கோட்டத்தைச் சிறைக் கோட்டமாக்கிய இவர்கள் சிறுமை எங்கே!

கோடை விடுமுறையில் தலைநகரை நோக்கிய தமிழ் உரிமைப் பெருநடைத் திட்டம் ஒன்றை உருவாக்கினார் பேராசிரியர். கல்வித் துறை, ஆட்சித்துறை, நீதித்துறை, கலைத்துறை, சமயத்துறை ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமிழ் உரிமையை நிலை நாட்டும் நன்னோக்குடன் தொடங்கப்பட்டது தமிழ் உரிமைப் பெருநடை. தென்னங் குமரி தொடங்கிச் சென்னையில் நிறைவுறும் பெருநடைத் திட்டமாக உருப்பெற்றது. உயர்நிலைப் பள்ளிகளில் ஒரே காலத்தில் தமிழைப் பாட மொழியாக்கியது போல் கல்லூரிகளிலும் ஒரே சமயத்தில் எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் தமிழைப் பாடமொழியாக்க வேண்டும் என்று அரசினரையும் துணை வேந்தர் களையும் வலியுறுத்துதற்குக் கிளர்ந்த உணர்வை, வெளிப்பட விடாமல் ஒடுக்க முந்து நின்றது மும்மொழித் திட்டத்தை மூச்செனக் கொண்ட அந்நாள் அரசு. பெருநடை தொடங்குவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னரே அதாவது 1.5.65 இல் பேராசிரியரைப் பாதுகாவல் குற்றவாளி யாக்கி இரவோடு இரவாக வேலூர்ச் சிறைக்கண் சேர்த்து, வெற்றிக்கொடி நாட்டியதாக விம்மிதமுற்றது. தாய்த் தமிழைக் கட்டிக் காக்கத் துணிந்த ஒரு மகனை அத்தாய்த் தமிழ் மகனே சிறைப் படுத்திய வன்கொடுமை ஒரு 'வரலாற்றுப் புரட்சியே'யாம்.

'தமிழ்த்தாய் சிறையில்' என்று பேராசிரியர் சிறைக்குள் சிக்கிக் கிடக்கும் நிலையை, நாளெண்ணிக் காட்டிப் பெருமை பெற்றன முரசொலி முதலிய நாளிதழ்கள். எத்தகைய வழக்குப் பதிவும் இல்லாமல் மூன்றரைத் திங்கள் சிறைக்கண் வைத்தது அரசு. அதனை விட்டு வெளியேறுங்கால் வேலையையும் பறித்துக் கொள்ளுதற்குரிய ஏந்துகளையெல்லாம் முனைப்புடன் தீட்டியும் வைத்திருந்தது. தன்னைக் காத்துக் கொள்ள விரும்பிய கல்லூரி



நிறுவனம், தமிழைப் பழிவாங்கிக் கொண்டது! ஆம்; தந்நலங் கருதாத் தமிழ்த் தொண்டுக்குத் தகவான பரிசுகள் அடுக்கடுக்காய் வந்தன! இச் சூழலில் முகிழ்த்ததே 'நாடும், மொழியும் நம்மிரு கண்கள்' என்னும் இச்செய்யுள் நாடகம்!

'நாட்டுத் தொண்டரை மதிக்கும் அரசு, மொழித் தொண்டரை மிதிக்கும் மிதி என்னே! என்னே!' என என் உள்ளம் நைந்தது! கடன் கொண்டும் கடன் செய்யும் கடமை வீரரைத் தாங்குதலைக் கடனாகக் கொள்ள வேண்டிய அரசு, தாக்குதலைக் கொள்ளும் தரக்கேடு என்னே! என்னே!' என என் நெஞ்சம் ஏங்கியது! நாட்டுத் தொண்டுக்குச் சேரனையும் மொழித் தொண்டுக்குக் கீரனையும் படைத்து இருவரையும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் ஆக்கி, அவர்கள் தாய் தந்தையரை மேடைக்கு ஏற்றி ஆடவிட்டது! நாடகக் கரு எது? 'நாடும் மொழியும் நம்மிரு கண்கள்' இதுவே முடிமணி ஆயிற்று!

ஏறத்தாழ இருபது ஆண்டுகள் பேழைக்குள் ஒடுங்கிக் கிடந்த படைப்பின் பயனைப் பைந்தமிழ் உலகுக்கு முதற்கண் படைத்த படைப்பாளர் திரு. நா. எழில்–மகிழ்நர் ஆவர். அவர் அறிவர்; அரிய செறிவர்; கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி அன்ன தொகுப்பர்; தனித்தமிழ்த் தொண்டர்; மொழி ஞாயிறு பாவாணர்மேல் மட்டற்ற ஆர்வலர்; அணுக்கர்! பாவாணர் பெயர் விளங்கும் எம் ஆய்வு நூலகத்தை வளர்த்தலில், புரவாண்மை மீக்கூர்ந்தவர்; அவர்க்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன். முதற்பதிப்பு ஆண்டு 1984. இப்பதிப்பு தவச்சாலை வழியே வெளிப்படுகின்றது. இதன் கொடைஞர் மலையகத் தோன்றல் திருத்தகு ஆ. மாரியப்பனார், வெற்றிச் செல்வியர் ஆவர்.

'நாடும் மொழியும் நம்மிரு கண்கள்'

நூல் வருமுறை

15.8.97

# இவர் ஒரு தமிழ் இயக்கம்

*— அறிஞர் கி. வேங்கட சுப்பிரமணியன்*

இன்று செப்டம்பர் 3-ஆம் நாள்; சீரிய சிங்கத்தமிழர் பேராசிரியர் இலக்குவனார் இறையெய்திய 25-ஆவது நினைவாண்டு. 1909-இல் பிறந்து 1973-இல் மறைந்த மாமேதை இவர். இன்றிருந்தால் 90-வது ஆண்டு விழா நடந்திருக்கும். ஆனால் தமிழ் கூறும் நல்லுலகம் அதற்குரிய பேற்றினைப் பெற்றிருக்கவில்லை. அமரர் இலக்குவனார் அன்றும், இன்றும் என்றும் ஒரு தமிழ் இயக்கம். பெர்னார்ட்சா என்னும் பேரறிஞன் மறைந்த உடன் உலகம் கூறியது : ''அவர் ஒரு தனி மனிதரல்லர் - அவர் ஓர் இயக்கம்'' என்று. தமிழகத்திலே இவருக்கு இணையாகப் பேராசிரியர் இலக்குவனாரைக் கூற முடியும். ஆம். இவர் ஒரு மாபெரும் தமிழ் இயக்கம்.

என் வாழ்வில் மறக்க வொண்ணா ஆண்டுகள் 1944-1946. நான் திருநெல்லையம்பதியில் அமைந்த மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில் (பேரா. இலக்குவனார் மொழியில் 'கல்லூரி தொடக்க வகுப்பு') படித்த காலம்தான் அவை. அன்று பேராசிரியர் சி. இலக்குவனார் அங்கு தமிழ்ப் பேராசிரியர். நான் பெற்ற பெரும்பேறு நான் அவர் மாணவன். அவருக்கு அணுக்க மாணவன். எனவே தான் அந்த இரண்டாண்டுகள் என் மனதிலே இன்றும் பசுமையாக இருக்கிறது.

இன்று யார் யாரோ 'புரட்சி' என்ற அடைமொழியுடன் வருகிறார்கள். ஆனால் உண்மையிலேயே ஒரு தமிழ்ப் புரட்சியை நடத்தியவர் பேராசிரியர் இலக்குவனார். கல்லூரி ஆசிரியர் கூட்டத்தில், கல்லூரி முதல்வர் ஆங்கிலத்தில் பேசமுற்பட்ட போது 150 பேராசிரியருள் தைரியமாக எழுந்து நின்று 'என்னருமைத் தமிழ்நாட்டின் தாய்மொழி தமிழ் என்பதைக் கல்லூரி முதல்வர் அறிவாரா?'' என்று கேட்டு புரட்சி செய்த பெருந்தகை முனைவர் இலக்குவனார்.



*''சலுகை போனால் போகட்டும் - என்*
*அலுவல் போனால் போகட்டும்*
*தலைமுறை ஒரு கோடி கண்ட என்*
*தமிழ் விடுதலை ஆகட்டும்''*

என்று பாவேந்தரின் அறைகூவலுக்கு இலக்கணமாக அமைந்தவர் அவர். புலவர் பி.ஓ.எல்., எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி., பட்டங்கள் பெற்ற இம்மேதை அடக்கமே உருவானவர்.

பேராசிரியரின் துணிவு பெயர் பெற்றது. ஒரு முறை எங்கள் இலக்கிய மன்றத்தில் ஓர் அரசியல்வாதியை (கல்லூரிக் குழுவின் தூண்) அழைத்துப் பேசச் சொன்னோம். நான் செயலர், தலைவர் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இலக்குவனார். பேசிய அன்பர் பத்து வார்த்தைகளுள் ஐந்து ஆங்கில வார்த்தைகள் கலந்து மணிப்பிரவாள நடையில் பேசினார். பேரா. இலக்குவனாரால் பொறுக்க முடியவில்லை. தலைவர் முடிவுரையில் தமிழ்ச் சிங்கம் சீறியது. நடமாடும் தமிழ்ச் சங்கம் உறுமியது. ஒரே தமிழ்க் கர்ச்சனைதான். அவர் பேசினார் :

''தமிழின் அழியாத நிலைக்கும், என்றும் சாகாத ஒரு தன்மைக்கும் இன்று நம் கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் சொற்பொழிவு ஒரு சான்று. வரிக்குவரி அன்னார் தமிழைக் கொல்ல பல தடவை முயன்றும் தமிழ் சாகவில்லை. முன்னைவிடத் தெம்பாக நிற்கிறது!'' என்றாரே பார்க்கலாம்? கூட்டம் பூராவும் நெளிந்தது. ஆனால் தமிழர் ஏறு, தலை தூக்கி நடந்து சென்றார். கூட்டம்

முழுவதும் தாமாகவே (பேச்சாளர் உட்பட) எழுந்து நின்றது அன்று. பேராசிரியருக்குப் பிடித்தமான ஒரு பாடல் எனக்கு அப்போது நினைவுக்கு வந்தது. கலிங்கத்துப்பரணி செயங்கொண்டார் வரிகள்.

*''அரவர், அரவர் என்று*
*அஞ்சி ஓட, ஓட''*

1965 மே முதல் நாள் நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைக்கு அனுப்பப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் அன்று இவர் ஒருவர்தான். இவருடன் பாதுகாப்புக்காக உள்ளே சென்றவர்கள் கலைஞர் மு. கருணாநிதி, காஷ்மீர் சிங்கம் சேக் அப்துல்லா, ஆகியோர்.

தமிழர் இங்கு ஆட்சி ஏற்ற போதிலும், உரிமை பெற்றுப் பல ஆண்டுகள் ஆனபோதிலும் நடப்பைக் கண்டால், தமிழ்நாடு இருக்கும், தமிழர்கள் இருக்க மாட்டார்கள் என்ற அச்சம் தோன்றுகிறது. தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழைத் தவிர்த்துப் படிக்க முடியும் என்ற அவலநிலை என்று மாறும் என்று என்றென்றும் மருகினார், உருகினார் பேராசிரியர். இந்த ஏக்கம் என்றும் அழியாத ஒரு பாட்டாக உருவெடுத்தது.

**இளமையில் நரை :**

*''யாண்டு பலவின்றியும் நரையுளவாகுதல்*
*யாங்காகியர் என வினவுதிராயின்?*
*ஆண்ட நம்மக்கள், அடிமைகளாயினர்*
*பூண்ட நம் பண்பு போலியதாகின்று*
*நற்றமிழ் மறந்தனர், நானிலமதனில்*
*பிறமொழிப் பற்றில் பெரியோராயினர்*
*தமிழகத்துத் தெருவில் தமிழ்தான் இல்லை,*
*ஊரும் பேரும் உயர்மொழி வழக்கும்*
*அயல்மொழி தன்னில் அமைந்திடக் கண்டோம்*



*தமிழைக் கற்றோர் தாழ்நிலை உறுவதால்*
*தமிழைப் பயில தமிழரே வந்திலர்*

இப்படிப் பலவரிகள், இதய ரத்தம் தோய்ந்த வரிகள். 1962-ல் இவர் எழுதிய இந்த வரிகள் இன்றும் நமக்கு முழுதும் பொருந்தும்.

பேரா. இலக்குவனார் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஒப்பற்ற இந்நூலை 2-ம் உலகத்தமிழ் மாநாட்டின் சார்பில் ரோமாபுரியில் போப் பாண்டவருக்கு அண்ணா அளித்தார். தனியாக இப்புத்தகத்தில் அண்ணா ஆங்கிலத்தில் எழுதினார்கள். "To his Holiness the Pope, with Regards, I present this book which is a Capsule of Tamil Civilisation" என்று.

ஆம்! பேரா. இலக்குவனாரே ஒரு தமிழ்க் காலப் பெட்டகம் தான். வாழ்நாள் முழுவதும் போராட்டத்திலேயே கழித்த மாவீரர். அவரது சொற்களிலேயே பார்ப்போம். ''என் வாழ்க்கையே தமிழ் நலம் நாடிய போர்க்களம். இளமையில் வறுமையோடு போர்; சாதியோடு போர்; சமயத்தோடு போர்; மூட நம்பிக்கையோடு போர்; போர்; போர் என்றும் ஓயாத போர்! தமிழுக்காகவே வாழ்ந்து தமிழுக்காகவே தன் இன்னுயிர் ஈந்த இந்த மாத்தமிழரை நாம் மறக்க முடியுமா!

நெறியற்ற அரசியல் குட்டையிலும் முறையற்ற சினிமாப் புயலிலும் சிக்கிச் சீரழிந்துக் கொண்டிருக்கும் இன்றைய தமிழ் நாட்டுக்கு அஞ்சா நெஞ்சன் தமிழ்ப் பெரும் புலவர் ஒப்பாரு மிக்காருமற்ற பேராசிரியர் இலக்குவனார் நடத்திய மாபெரும் தமிழ் வேள்வி பற்றி ஞாபகப்படுத்த வேண்டியிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

- நன்றி : **'தினமணி'**

3, செப்டம்பர் 1998

# முத்தமிழ்ப் பேரர்வாளர் முதுபெரும் புலவர் முனைவர் சி. இலக்குவனார்

- *புலவரேறு* குன்றக்குடி பெரியபெருமாள் -

பயில்கின்ற போதே, தமிழன் செழுமைக்கும், தமிழின் தூய்மைக்கும் பாடுபடுவதும், பணியாற்றுவதும் தமது உயிர்க் கடமைகள் என உறுதி பூண்டவர் முனைவர் சி. இலக்குவனார். தெளிந்த நல்லறிவுடன், தீந்தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றும் மனத்திட்பத்தை அப்பெருமகனாருக்கு ஊட்டியதும், உருவாக்கியதும் திருவையாறு அரசர் கல்லூரியாகும்.

அரசர் கல்லூரியில் புலவர் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த போதே இலக்கணப் பயிற்சியிலும், மொழியியல் ஆராய்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு முனைந்து செயலாற்றிய இலக்குவனார், மாணவர்களின் பார்வையில் 'புரட்சிப் பூ'வாகவும் ஆசிரியர்களின் பார்வையில் 'புரட்சி ஞாயிறு' ஆகவும் திகழ்ந்தார்! மாணவர்களில் சிலருக்குப் 'பூமணம்' நெடியாகப் போனதும், ஆசிரியர்களில் சிலருக்கு 'ஞாயிற்றின் ஒளி' கண்ணை உறுத்தியதும் உண்மைதான்! எனினும் கல்லூரியில் உருவாக்கம் கொண்டிருந்த 'திருவள்ளுவர் மாணவர் கழகம்' என்ற அமைப்புக்குப் போட்டியிட்டபோது, இலக்குவனாரே வென்றார். 'தமிழ் வென்றது!' எனக் கல்லூரியில் பயின்ற மாணவர் அனைவரும் (!) அப்பெருமகனாருக்கு வாழ்த்து வழங்கினர்! ஆசிரியர்கள் அனைவரும் (!) மகிழ்ச்சியடைவதாகக் காட்டிக் கொண்டனர்!



திருவையாறு அரசர் கல்லூரி, தொடக்கத்தில் வடமொழிக் கல்லூரியாக (Sanskrit College) இருந்ததால், கல்லூரி நூல் நிலையத்தில் வடமொழி பற்றிய நூல்களும், மொழி ஆராய்ச்சி பற்றிய ஆங்கில நூல்களுமே மிகுதியாக இருந்தன. இலக்குவனார், ஆங்கில நூல்களைப் படித்து மொழி ஆராய்ச்சி பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதில் பேரார்வம் காட்டினார். பேரறிஞர் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல்' இலக்குவனாரின் உள்ளத்துள் தமிழ்மொழி பற்றிய பேருண்மைகளையும், பெருஞ் சிறப்புகளையும் நிறைத்தபோது, 'அடடா! எத்தகைய பெருமை கொண்டது தமிழ் மொழி!' என நினைந்து, நெகிழ்ந்து அந்த இளைய பருவத்திலேயே பெருமிதம் கொண்டார் அப்பெருமகனார். அப்போதே இதழ்களில் தமிழ்மொழியின் தொன்மை பற்றியும், தூய்மை பற்றியும், வளமை குறித்தும், இனிமை குறித்தும் எழுதத் தொடங்கிவிட்டார் இலக்குவனார். மாணவ நிலையில் பெற்ற அறிவூட்டத்தைக் கொண்டே, தொல்காப்பியத்தின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென 'இந்துநேசன்' இதழில் இலக்குவனார் எழுதிய அரிய கட்டுரை உரிய தாக்கத்தை ஆராய்ச்சி உலகுக்களித்தது! உண்மையாகவே கல்லூரி ஆசிரியர்கள் உவந்து போற்றினர்! வியந்து பாராட்டினர்!

கல்லூரி – வகுப்புகளில் ஆசிரியர்கள் தமிழின் தொன்மை பற்றியும், தூய்மை பற்றியும் தவறான கருத்துக்களைச் சொல்வார்களானால், இலக்குவனார் உடனே எழுந்துவிடுவார்! 'ஏது காரணம்?' என வினவுவார். எதன் அடிப்படையில் கூறுகிறீர்கள்? எனக் கேட்பார். தவற்றைத் திருத்திக் கொள்ளாதவரை, ஆசிரியராயிற்றே என விட்டு விட மாட்டார்! மறுப்பதோடு நின்றுவிடாது, கேட்பதோடு விட்டு விடாது, தமது மறுப்புக்குரிய அடிப்படையான கருத்துக்களையும், விளக்கத் துணிந்துவிடுவார். வகுப்பு ஓர் ஆய்வுக் களமாக உருவாக்கம் பெற்றுவிடும்.

இளமையில் பற்றிக் கொண்ட தமிழுணர்வு, வாழ்வுமுற்றும் இமைப்பொழுதும் இலக்குவனாரை விட்டு நீங்கியதில்லை.

அப்பெருமகனார் தமிழுணர்வை ஊட்டியதோடு, தமிழின் இலக்கிய மாட்சிகளைத் தமிழர் அறிந்து பெருமிதம் கொள்ளவும் செய்தார். ஆங்கிலம் அறிந்தோர், ஆங்கில மொழியாளர் தமிழின், தமிழரின் தொன்மையை, பண்பாட்டுச் சிறப்பை, அகப்பொருள் ஒழுக்கங்களை அறிந்து கொள்வதற்கும், அறியச் செய்வதற்குமென்றே இலக்குவனார் ஆங்கில இதழ்கள் இரண்டை வெளிப்படுத்தினார்.

திருக்குறளை எவரும் படித்தறியுமாறு எளிய பொழிப்புரை எழுதி வெளியிட்ட அப்பெருந்தகை, 'தொல்காப்பிய விளக்கம்', 'வள்ளுவர் வகுத்த அரசியல்', 'வள்ளுவர் கண்ட இல்லறம்', 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்', 'கரும வீரர் காமராசர்', 'அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து', 'எழிலரசி', 'மாணவர் ஆற்றுப்படை', 'துரத்தப்பட்டேன்', 'என் வாழ்க்கைப் போர்' – எனப் பல நூல்களை உருவாக்கித் தமிழன்னைக்கு அணிவித்தார். என்றென்றும் நின்று பயன் தருவதும், பொன்றாப் புகழ் படைத்ததுமான தொல்காப்பிய மொழி பெயர்ப்பு, அப்பெருமகனார் தமிழ்த் தாய்க்குச் சூட்டிய மணிமகுடம் என்றே கூறலாம்.

தமிழ் மொழியைத் தூய்மையுடையதாக, தொன்மை நலமெல்லாம் மிளிரத் தமிழருக்கு நன்மையளிப்பதாக, அயல் வழக்கற்ற அணிகலம் பூண்டதாக, தனித்தன்மை கொண்ட தன்மானம் மிக்கதாகச் சிந்தனையாலும், செயலாலும் ஆற்றிய இலக்குவனாரின் அரிய தமிழ்ப் பணிகள், அப்பேரறிஞரின் வாழ்க்கையைப் போர்க்களம் ஆக்கின. என்றாலும், அப்பெருந்தகை தளர்ந்து விடவுமில்லை. சற்றும் அயர்ந்து விடவுமில்லை. களம் அடுத்துக் களம் தோன்றிய போதும் ஒரு சிறிதும் கவலை கொண்டதுமில்லை! கொண்ட குறிக்கோளை உயிர்க் கடமையாகக் கொண்டு உயிர் பிரியும் வரை செயலாற்றினார்! உணர்வற்றுப் போகும் இறுதி மூச்சுவரை தமிழ் உணர்வைச் செழிக்கச் செய்தார்.

சோழ நாட்டில் திருமறைக் காட்டிற்கு மேற்கே பன்னிரு கல் தொலைவிலுள்ள வாய்மேடு அழகிய சிற்றூர். அங்கே வாழ்ந்த சிங்காரவேலு, இரத்தினம் அம்மாளுடன் வாழ்ந்த இல்லறப்



பயனாய் மூன்றாவது புதல்வராக இலக்குவனார் 1910 ஆம் ஆண்டில் பிறந்தார்.

'இலட்சுமணன்' என்பது இலக்குவனாருக்கு பிறந்த போது இட்ட பெயர். இராசாமடத்தில் இரண்டாம் படிவம் பயின்று கொண்டிருந்த போது, அறிஞர் சாமி, சிதம்பரனார், இலட்சுமணன் என்ற பெயரை 'இலக்குவன்' எனத் தமிழ்ப் பெயராக மாற்றினார். வாய்மேடு திண்ணைப் பள்ளியில் படித்து, இராசாமடம் நடுநிலைப் பள்ளியில் சேர்ந்து பயின்று கொண்டிருந்த காலக் கட்டத்தில், தமிழாசிரியர் சாமி சிதம்பரனாரின் பகுத்தறிவுக் கோட்பாடுகளும், சீர்திருத்தக் கொள்கைகளும் தனித்தமிழ்ப் பற்றும் இலக்குவனாரைத் திண்மையுடன் பற்றிக் கொண்டன. உரத்த நாடு உயர்நிலைப் பள்ளியில் பின்னர் பயின்று, பள்ளி இறுதித் தேர்வில் சிறப்பாக மதிப்பெண்கள் பெற்றுப் பெருமையுடன் தேர்வு பெற்றார்.

உயர்நிலைப் பள்ளியில் இலக்குவனார் பயின்று கொண்டிருந்த போது, பெரியார் ஈ.வே.ரா., தலைமையில் சுயமரியாதை இயக்கம் தோன்றி, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டிருந்தது. அக்கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இலக்குவனார், பெரியாரோடு தொடர்பு கொள்வதில் பேரார்வம் கொண்டார். அந்த ஆர்வம் பெரியாரின் அன்பைப் பெற்றுத் தந்தது. சாமி. சிதம்பரனாரின் தொடர்பும், பெரியாரின் அன்பும் இலக்குவனாரை அந்த இளம் வயதிலேயே புதியதொரு வழித் தடத்தில் புத்துணர்ச்சியுடன் நடக்கத் தூண்டின.

தந்தையின் மரணமும், ஏழைமைச் சூழலும் பள்ளி இறுதித் தேர்வுக்கு மேல் கற்க இயலா நிலையை அப்பெருமகனாருக்கு ஏற்படுத்திய போதிலும், 'பெருமை முயற்சி தரும்' என்பதில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்த இலக்குவனார் பல்வேறு அல்லல்களைச் சுமக்க வேண்டிய சூழ்நிலைகள் குறுக்கிட்ட போதும், திருவையாறு அரசர் கல்லூரியில் சேர்ந்து, புலவர் பட்டம் பெற்றார். இக்கல்லூரியில் மாணவராக இருந்தபோதே, தமிழ் உலகில் ஒரு புரட்சியாளராக

ஐம்பது வயதைக் கடந்த பின்னரும், தமிழ்த் துறையில் மெய்யுணர்வு அறிஞர் (Doctor of Philosophy) எனும் 'முனைவர்' பட்டம் (Ph.D.) பெறுவதில் முனைந்து வெற்றி பெற்றார். தமிழ்ப் பற்றின் காரண மாகவும், தமிழ்ப் பணிகளின் காரணமாகவும் பல்வேறு இடர்ப்பாடு களால் தாக்குண்டு, தாக்குண்டு முனைவர் பட்டம் பெறும் முயற்சி தடைப்பட்டுத் தடைப்பட்டு நின்று போனது. எனினும், இலக்கு வனாரின் முயற்சி, முதுமையில் தான் வெற்றி வாய்ப்பைப் பெற்றது. முனைவர் பட்டம் பெற்றபோது இலக்குவனார் பெற்ற பாராட்டைப் போல எவரும் பெற்றதில்லை. ஏனெனில், ஏனையோரெல்லாம் பட்டம் பெற்ற பின்னரே தமிழகத்திற்கு அறிமுகம் ஆயினர். அப்பெரு மகனாரோ, தமிழகத்தின் தலை சிறந்த தமிழறிஞராய்ப் புகழடைந்த பின்னரே, முனைவர் பட்டம் பெற்றார்!

தொல்காப்பியம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஓர் அரிய ஆராய்ச்சி முன்னுரையும் விரிவாக எழுதி அளித்தே, இலக்குவனார் 'முனைவர்' பட்டம் பெற்றார். மேனாட்டவரும் போற்றத் தக்க ஆங்கிலத்தில் தொல்காப்பியத்தை மொழி பெயர்த்த செயற்கரிய செயல், அப்பெருந்தகைக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது.

தமிழின் தூய்மையைப் பேண வேண்டுமெனும் பேரார்வத்தால், அப்பேரறிஞர் 1962 ஆம் ஆண்டு மதுரையில் 'தமிழ்க் காப்புக் கழகம்' என்னும் ஓர் அமைப்பை உருவாக்கம் செய்தார். தனித்தமிழ்ப் பாதுகாப்பு, இன்றியமையாத காலத்தின் கட்டாயம் எனக் கருதிய அப்பெருமகனார், கழகத்தின் சார்பில் மொழி விழாக்களை முனைந்து நடத்தினார்; புலவர் விழாக்களைப் புகழோங்க நடத்தினார். அவ்வப் பொழுது துண்டறிக்கைகளும், அனைவரும் கண்டுணரச் சுவரொட்டி களும் வெளியிடப் பெற்றன. ஊர்வலங்களும், பேரணிகளும், பொதுக் கூட்டங்களும் நடத்தப் பெற்றன. தமிழ்நாட்டின் பல்வேறு பெரு நகரங்களிலும், வெளிநாடுகளிலும் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தின் கிளை அமைப்புகளைப் பேரறிஞர் சி. இலக்குவனார் தோற்றம் பெற வைத்தார். இக்கழகமே 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப்



பாசறை ஆயிற்று. இலக்குவனார் இந்தி எதிர்ப்பு வீரர்களின் தளபதி ஆனார்.

பேரறிஞர் நடத்திய 'குறள் நெறி' இதழ் அப்பெருமகனாரின் பெரு முழக்கத்தைப் பறைசாற்றும் போர் முரசாகத் திகழ்ந்தது. அந்நாள் ஆட்சியாளர் அஞ்சும் அளவிற்குத் தமிழ் காக்கும் போராட் டத்தைக் கிளர்ந்தெழச் செய்தார் இலக்குவனார்! பேரறிஞர்களும் அப்பெருமகனாருக்குத் துணையாக நின்ற பெருமக்களும் அரசினரின் தொல்லைக்கு உள்ளாயினர். இலக்குவனார் மீது பதினான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப் பெற்றன. எச்சமயத்திலும் பேரறிஞர் இலக்குவனார் சிறைப்படுத்தப்படலாம் என்னும் நிலை உருவாயிற்று. எனினும் தமிழுணர்வு கொண்ட முப்பத்தாறு வழக்கறிஞர்கள அப்பெருமகனாருக்காக வழக்காட முன் வந்தனர்.

கல்வித்துறை, ஆட்சித் துறை, நீதித்துறை ஆகிய அரசின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் உரிமையை நிலைநாட்டும் நோக்கத் துடன், 'தமிழ் உரிமைப் பெருநடைத் திட்டம்' ஒன்றை உருவாக்கினார். அப்புலவர் பெருமான், கோடை விடுமுறையில் மதுரையிலிருந்து சென்னைக்கு நடந்தே சென்று, வழியில் உள்ள ஊர்களிலெல்லாம் உரிமை முழக்கமும், உரை விளக்கமும் செய்வதைத் திட்டமாகக் கொண்ட 'பெருநடை' தொடங்குதற்கு இரு நாள்கள் முன்னதாக, இலக்குவனாரைப் பாதுகாப்புக் கைதியாக்கி, வேலூர்ச் சிறைக் கோட்டத்தில் அரசு அடைத்துவிட்டது! எவ்விதமான வழக்குப் பதிவும் இல்லாமலேயே சிறையில் முடங்கிக் கிடக்க வேண்டிய அவலம் ஏற்பட்டது. சிறையிலிருந்து விடுபடுகிற நிலையில், இலக்குவனாரின் தமிழ்ப் பேராசிரியப் பணியைப் பறித்துக் கொள்வதற்குரிய ஏற்பாடு களையும் அரசாங்கம் செய்து வைத்தது.

இதழாசிரியராக வீற்றிருந்த இலக்குவனார் ஆற்றிய பணிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. 'சங்க இலக்கியம்' கிழமை இதழ், 'இலக்கியம்', திங்களிதழ், 'திராவிடக் கூட்டரசு' திங்கள் இதழ், 'குறள் நெறி' – திங்களிதழ், நாளிதழ் முதலிய தமிழ் இதழ்களின் வழியே

இலக்குவனார் மதிக்கப்பட்டார்! பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல். (B.O.L.) பட்டம் பெற்றார். பி.ஓ.எல்., எம்.ஏ., தகுதியுடையதெனப் பல்கலைக் கழகம் விதி செய்தபோது, எம்.ஏ., பட்டத்தைப் பெற்றார்.

திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் 1936 ஆம் ஆண்டு தமிழாசிரியராகப் பொறுப்பேற்ற இலக்குவனார், பின்னர் தஞ்சை மாவட்டக் கழகப் பள்ளியிலும், திருவையாறு அரசர் கல்லூரியிலும் திருநெல்வேலி, மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியிலும் பணியாற்றி 1952 ஆம் ஆண்டு விருதுநகர் இந்து நாடார் கல்லூரியில் பணி ஏற்றார். பிறகு திருவெறும்பூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டு முதல்வராகப் பணிபுரிந்து, அதன் பின்னர் ஈரோடு மகாசனக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் விரிவுரையாளராக இருந்து, நாகர்கோவில இந்துக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக வீற்றிருந்தார். பின் ஆறு ஆண்டுகள் மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார் இலக்குவனார்.

தமிழ்த் துறையில் பணியாற்றிய காலங்களில் பெரும்பான்மையும், அரசின் தொல்லைகளைத் தொடர்ந்து ஏற்க வேண்டிய கட்டாயம் அப்பேரறிஞருக்கு நிகழ்ந்து கொண்டே இருந்தது! 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்ற பின்னரே, அப்பெருமகனார் அரசுத் தொல்லைகளிலிருந்து விடுபட்டார்.

பேராசிரியர், பேரறிஞர் இலக்குவனாரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் போற்றிய அமைப்புகளும், மக்களும் அப்பெருந்தகைக்கு 'முத்தமிழ்க் காவலர்', 'செந்தமிழ் மாமணி', 'பயிற்சி மொழிக் காவலர்', 'தமிழர் தளபதி', 'இலக்கணச் செம்மல்' என்னும் பல்வேறு பட்டங்களையும் விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

சிங்கப்பூர், மலேசியா முதலிய கீழை நாடுகளுக்கு, தமிழ் வளர்ச்சிப் பணிபுரிய 1971 ஆம் ஆண்டில் வெளிநாடு சென்று வந்தது. முதலாகவே, அப்பெரியாரின் உடல் சுணங்கத் தொடங்கி



விட்டது. 'தமிழ் தமிழ்' என உடல் நலம் குன்றிய காலத்தும் ஓயாது உழைத்துக் கொண்டேயிருந்தார் இலக்குவனார். பேராசிரியரைக் கண்ட பேரன்பு கொண்டோர் அனைவரும் ஓய்வும், அமைதியும் பெறுமாறு வலியுறுத்தியும், தமிழின் மாட்சிக்கு உழைப்பதில் 'ஓய்வு' என்ற சொல்லுக்கே இடமில்லையெனக் கூறிவிட்டார் அப்பெருமகனார்.

தமிழின் செழுமைக்குத் தம் வாழ்வையே உரமாகவும், போர்க்களமாகவும் செய்து கொண்ட அந்த வீரத் தமிழர் அறுபத்து மூன்று ஆண்டுகளே உயிர் வாழ்ந்திருந்தார். ஆம்; 1973 ஆம் ஆண்டு இலக்குவனார் 'அமரர்' ஆனார். தமிழ் வளர்ச்சிக்காக அப்பெருந்தகை கொண்ட போர்க்குணமும், கண்ட போர்க்களமும் தமிழன் வரலாற்றிலும், தமிழரின் நெஞ்சங்களிலும் இடம்பெறத் தக்கவை; இணையற்றவையென என்றென்றும் போற்றத்தக்கவை.

நன்றி : **தமிழரசி** (9.7.1995)

*உன்னாலே ஊட்டப் பெற்ற தமிழ்ப்பற்று*
*நன்னாலே பரிணாம வளர்ச்சி கண்டு*
*பின்னாலே அரசியலில் வடிவம் கொண்டு*
*சொன்னாலே வியக்குமளவு வளர்ந்தது நன்று.*

*தாழ்ந்த தமிழினத்தை வாழவைத்த பெரியார் இராமசாமி*
*தாழ்ந்த தமிழ்மொழியைக் காத்துத்தந்த பெரியார் இலக்குவனார்*
*வாழ்ந்தபடி இனப்பற்றும் மொழிப்பற்றும் கைக் கொண்டு*
*வாழ்ந்து காட்ட உற்சாகமாய் உறுதி கொள்வோம்.*

நன்றி : *'வேந்தன் வழி'*

# தமிழ் எழுச்சி விழா

– வளர்தமிழ்த் தொண்டர் **வ. வேம்பையன்** –

தமிழ் நாட்டில் பண்டிகைகளுக்குப் பஞ்சமில்லை. அவை நமது மூளைகளுக்கு விலங்கிட்டுவிட்டன. முன்னேற்றத்தைப் பாழ்படுத்திவிட்டன; மொத்தத்தில் அவை அந்நியப் படையெடுப்பு விழாக்களாகிவிட்டன. இவை தாம் நம் மீது திணிக்கப்பட்ட விழாக்களின் பலனாகும்.

ஆனால், பொங்கல் விழா மட்டுமே உழவையும் உழைப்பையும் தொழிலையும் உயர்வாக்கிக் காட்டுகின்றது; நன்றியைப் போற்றுகின்றது; சான்றோர்களை மதிக்கின்றது; தமிழ் மொழி எழுச்சிக்கும் தமிழ் இன வளர்ச்சிக்கும் வகை செய்கின்றது. வீடு, நாடு, மொழி மூன்றையும் ஒரே சமயத்தில் போற்றிப் பின் பற்றிப் பரப்புவதற்குரிய உணர்ச்சியை ஊட்டுகிறது. அதனால் தான் அது தமிழர் திருநாள் என்று அழைக்கப்படுகிறது.

அத்தகைய சிறப்புக்குரிய தமிழர் திருநாளில்,

*"சலுகை போனால் போகட்டும் - என்*
*அலுவல் போனால் போகட்டும்*
*தலைமுறை ஒரு கோடி கண்ட - என்*
*தமிழ் விடுதலை ஆகட்டும்"*

என்ற புரட்சிக் கவிஞரின் பாட்டு இலக்கணத்திற்கு இலக்கியமாகவும் தமிழ் எழுச்சியின் சின்னமாகவும் விளங்கிய பேராசிரியர் இலக்குவனாரின் வாழ்வும் தொண்டும் வாய்மைப் போரும் பற்றிப் பார்ப்போம்.



**பிறப்பு :** மேனாள் தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், வாய்மேடு என்ற சிற்றூரில் திருவள்ளுவர் ஆண்டு 1941 நளி (கார்த்திகை) மாதம் 2ஆம் நாள் (17-11-1910) இலக்குவனார் தோன்றினார். தாய் இரத்தினம் அம்மாள்; தந்தை மு. சிங்காரவேலு.

**பெயர் :** பெற்றோர் அவருக்குச் சூட்டிய பெயர் இலட்சுமணன். 'தமிழர் தலைவர் தந்தை பெரியார்' என்ற நூலின் ஆசிரியர் அறிஞர் சாமி. சிதம்பரனாரின் அறிவுரையை ஏற்றுத் தன் பெயரை இலக்குவன் என்று மாற்றித் தமிழர்க்குப் பெயர் தமிழில்தான் இருத்தல் வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்தினார்.

**படிப்பு :** திருவையாறு அரசர் கல்லூரில் புலவர் கல்வி கற்றுத் தேர்ந்தார். பணியில் அமர்ந்த பின் படித்து பி.ஓ.எல்., எம்.ஏ., எம்.ஓ.எல்., பட்டங்களைப் பெற்றார். தொல்காப்பியம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆராய்ச்சி செய்து முனைவர் (Ph.D.) பட்டம் பெற்றார்.

**பதவி :** 1936 சூன் மாதத்தில் திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். அதுபோது தமிழ்நாடு முதல்வரும் தமிழினத் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி இவரிடம் தமிழ் பயின்றார். 31-12-1970 ஆம் நாள் நாகர்கோயில் தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**நூல்கள் :** பதினான்கு தமிழ் நூல்களும் ஐந்து ஆங்கில நூல்களும் இவர் எழுதி வெளிவந்துள்ளன. இவற்றுள் 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்ற தமிழ் நூலும் Tholkappiyam in English with Critical Studies என்ற ஆங்கில நூலும் குறிப்பிடத் தக்கவையாகும்.

**தாளிகைகள் :** சங்க இலக்கியம், இலக்கியம், திராவிடக் கூட்டரசு, Dravidan Federation, Kuralneri, குறள் நெறி ஆகிய

தாளிகை (பத்திரிகை)களைத் தொடங்கி ஆசிரியர், வெளியீட்டாளர் பொறுப்பும் ஏற்றுத் தம் கொள்கைகளை அவை மூலம் பரப்பினார். தமிழ்ப் பேராசிரியர்களில் தமது வாழ்க்கை முழுதும் இதழ் வெளியீட்டுப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு மொழி, இனத் தொண்டு செய்தவர் இலக்குவனாரே ஆவார்.

**தமிழ்க் காப்புக் கழகம் :** தமிழ் மொழியைக் காப்பதற்கும் வளர்ப்பதற்கும் மதுரை தமிழ்க் காப்புக் கழகம் நிறுவினார். அதன் சார்பில் மாணவர்களுடன் ஊர்வலமாகச் சென்று கடைப் பெயர் களைத் தமிழில் எழுதுமாறு கோரினார். புரட்சிக் கவிஞரின் 'தமிழியக்கம்' வெளியிட்டுள்ள கொள்கைகளையே இக்கழகத்தின் குறிக்கோள் ஆக்கினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இக்கழகத்தின் செயல்முறைகளைப் பாராட்டியுள்ளார்.

**அண்ணா ஏற்றார் :** 7-1-63 ஆம் நாள் மதுரை தியாகராசர் கல்லூரியில் 'தத்துவப் போர்' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா பேசினார். அப்போது அக்கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் இலக்குவனார் பேசுகையில் விலைவாசிப் போராட்டம் தேவையான ஒன்றுதான். அதைவிட முக்கியமாக இந்தி ஆட்சி மொழி ஆவதைத் தடுப்பதற்கு போராட்டங்களைத் தொடங்க வேண்டும் என்று கோரினார்.

''நல்ல கருத்து; பொதுக் குழுவைக் கூட்டிப் போராட்டத் திட்டம் வகுப்பேன்'' என்று அறிஞர் அண்ணா அவருடைய கோரிக்கையை ஏற்றுப் பேசினார். அதன்படியே சட்ட எரிப்புப் போராட்டத்தைத் தொடங்கினார். ஆட்சி மொழிச் சட்டப் பிரிவை எரித்துப் பலரும் சிறை சென்றார்கள்.

**மாணவர் இந்தி எதிர்ப்பு இயக்கம் :** மாணவர் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவராகவும் அதற்குக் காரணமாகவும் இருக்கிறார் இலக்குவனார் என்றும் அமைச்சர்களைக் கொல்லச் சதி செய்தார் என்பதும் உட்பட 14 குற்றச்சாட்டுகளைக் கூறியும் 1-2-1965 ஆம்



நாள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். அவருடைய அச்சகமும் வீடும் சோதனையிடப்பட்டன. புத்தகங்களும் பொருள்களும் காவல் துறையால் எடுத்துச் செல்லப்பட்டன.

**தமிழ் உரிமை பெருநடைப் பயணம் :** 1965 மே மாதம், பாடமொழியாகத் தமிழ் வரவேண்டியதன் தேவையை வலியுறுத்திக் குமரி முனையிலிருந்து சென்னை வரை தமிழ் உரிமை பெருநடைப் பயணம் ஏற்பாடு செய்தார்.

அதில் கலந்து கொள்ளத் தமிழ் மாணவர்களும் அறிஞர்களும் விருப்பம் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்கள். இதில் 40 மாணவர்கள் குருதிக் கையொப்பம் இட்டு அனுப்பி இருந்தார்கள்.

1965 மே மாதம் 5 ஆம் நாள் பயணம் தொடங்க வேண்டும். மே முதல் நாள் D.I.R. என்ற இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து வேலூர் மத்திய சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

காசுமீர் சிங்கம் சேக் அப்துல்லா, கலைஞர் மு. கருணாநிதி, நாம் தமிழ் இயக்கத் தலைவர் தினந்தந்தி ஆதித்தனார் ஆகியவர்கள் இச்சட்டத்தின் கீழ்தான் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள்.

தமிழ் அறிஞர் இலக்குவனாரை வலிமை வாய்ந்த ஓர் இயக்க மாக அன்றைய காங்கிரசு அரசு கருதியதால்தான் இவ்விதம் கடுமை யான D.I.R. சட்டத்தின் கீழ் கைது செய்தது என்பது எண்ணத்தக்கது.

1965 மே மாதம் தொடங்கிய தமிழ் உரிமைப் பெருநடைப் பயணத்தின் நோக்கம் 35 ஆண்டுகள் கழிந்தும் நிறைவேறவில்லை என்பதோடு தமிழ்நாடு இருக்கும்; தமிழர்கள் இருக்க மாட்டார்கள் என்னும் கெடு நிலையும் இழிநிலையும் தொடங்கிவிட்டன. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழ் கற்காமலேயே படிக்கலாம்; பட்டம் பெறலாம்; பதவி வகிக்கலாம்; பைந்தமிழ் நாட்டை ஆளலாம் என்னும் அவலநிலை இன்று ஏற்பட்டு விட்டது.

**பேராசிரியர் கண்ட போர்க் களங்கள் :** விருது நகர் செந்தில் குமார நாடார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இலக்குவனார் பணி புரிந்த போது 1952 ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் கரும வீரர் காமராசரை எதிர்த்தும் உலகப் புகழ் விஞ்ஞானி கோ.து. (G.D.) நாயுடுவை ஆதரித்தும் பொதுக் கூட்டங்களில் பேசினார் என்று குற்றம் சாட்டிக் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார்.

அதுபோது இனமானப் பெரியார் தமது விடுதலை ஏட்டில் "தமிழ்ப் பற்று காரணமாக, தமிழர் பற்று காரணமாக இலக்குவனார் பழி வாங்கப்பட்டு வேலையை விட்டுத் துரத்தப்பட்டிருக்கிறார். இவரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் நம் இரத்தம் கொதிக்கிறது: மனம் பதைக்கிறது. தமிழனுக்கும் தமிழுக்கும் பாடுபட்ட இவர் நிலையைப் பார் என அபாய அறிவிப்புக்கைகாட்டியாகத் தமிழறிஞர் காட்சி அளிக்கிறார்" என்று எழுதியுள்ளார்.

மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி செய்த போது 1965 ஆம் ஆண்டு மாணவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக இருந்தது. அதற்கு இலக்குவனாரே மூல காரணம் என்று குற்றம் சாட்டிக் காவல் துறையினர் 1-2-65; 1-5-65 ஆம் நாள்களில் இரண்டு முறை கைது செய்தனர். அதனால் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார்.

"என் வாழ்க்கையே தமிழ் நலம் நாடிய போராட்டக் களம்தான். இளமையில் வறுமையோடு போர்; சாதியோடு போர்; சமயத்தோடு போர்; மூட நம்பிக்கைகளோடு போர்; தமிழ் உரிமைக்காகப் போர்! போர்! போர்! என்றும் ஓயாத போர்தான்" என்று அவரே 'என் வாழ்க்கைப் போர்' என்ற நூலில் கூறியுள்ளது போல் அவரது வாழ்க்கையே வாய்மைப் போராக அமைந்துவிட்டது.

**வள்ளுவமே வழிகாட்டி :** பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் திருக்குறள் பற்றிய தவறான கருத்துக்களை அவர் வாழ்ந்த காலத்திலேயே மறுத்து முறையான கருத்துக்களை நிலைநாட்டிய பெருமை இலக்குவனாரையே சாரும்.



"என்னை உருவாக்கியதில் பெரும் பங்கு திருக்குறளுக்கு உண்டு" என்று உரைத்த உள்ளத்தால் உயர்ந்தவர் அன்றோ இலக்குவனார்.

**நால்வர் விழா :** தொல்காப்பியர் நாள், திருவள்ளுவர் நாள், இளங்கோ அடிகள் நாள், ஔவையார் நாள் என்று நால்வருக்கும் விழா எடுத்துக் கொண்டாட வேண்டும் என்பது அவருடைய நோக்கம் ஆகும்.

தை 2 ஆம் நாளைத் திருவள்ளுவர் திருநாள் என்று தமிழ்நாடு அரசு ஏற்று விழா கொண்டாடி வருகிறது. சித்திரை முதல் நாளை இளங்கோ அடிகள் நாள் என்று தமிழ்நாடு அரசு ஏற்று ஆணை பிறப்பித்துக் கொண்டாடல் வேண்டும் என்ற தமிழ் அறிஞர்களின் கோரிக்கை அரசின் முன் வைக்கப்பட்டுள்ளது. இவை அவர்தம் நோக்கத்தில் இரண்டுக்குக் கிடைத்த சிறப்பாகும்.

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் :** தமிழராகப் பிறந்தவர்கள் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் பயிலாது சாதல் கூடாது. இரண்டும் தமிழரின் இரு கண்கள் ஆகும். இரண்டையும் பயிலா தவர்கள் இரு கண்களும் அற்றவர்களே என்று இலக்குவனார் கூறுகிறார்.

**தமிழ் இயக்கம் கண்ட தன்மானச் சிங்கம் :** தமிழ் நலன், வளன் கருதிப் பலர் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். ஆனால், அதை ஓர் இயக்கமாக நடத்தியும் இதழ்கள் வெளியிட்டும் தமிழ் மொழி உணர்வையும் தமிழ் இன எழுச்சியையும் ஏற்படுத்திய பெருமை தமிழ் அறிஞர் இலக்குவனார்க்கே உரியதாகும்.

முடிவு : ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தை ஆங்கில மொழியில் பெயர்த்து ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்று, இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துச் சிறை புகுந்து, தமிழும் தமிழர் முன்னேற்றமுமே தம் மூச்சாகவும் பேச்சாகவும் செயலாகவும் வாழ்ந்த இலக்குவனார் திருவள்ளுவர் ஆண்டு 2004 மடங்கல் (ஆவணி) 18 (3-9-1973) ஆம் நாள் முடிவு எய்தினார்.

**இலக்குவனாரை உலகுக்கே தந்தவர் :** பேரறிஞர் அண்ணா அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற போது இலக்குவனாரின் ஆங்கிலத் தொல்காப்பியத்தையும் (G.U.) போப்பின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலையும் உடன் எடுத்துச் சென்று அமெரிக்காப் பல்கலைக் கழகங்களுக்கும் போப் ஆண்ட வருக்கும் அன்பளிப்பாக வழங்கி இலக்குவனார்க்கு உலகப் புகழ் சேர்த்துள்ளதை நினைக்கும் நெஞ்சங்கள் இனிக்கவே செய்யும்.

தமிழ் வளர்த்து உயர்வோம்; தலை நிமிர்ந்து வாழ்வோம் : தமிழுக்கும் தமிழருக்கும் எழுச்சியையும் ஏற்றத்தையும் தரும் தமிழர் திருநாளில் தமிழ் எழுச்சியின் உருவமாகவும் இயக்கமாகவும் விளங்கி வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற முனைவர் பேராசிரியர் இலக்குவனாரின் வழியைப் பின்பற்றித் தமிழ் வளர்த்து உயர்வோம்; தமிழ் நிமிர்ந்து வாழ்வோம்.

"தமிழர் மலர்ச்சியே தமிழின் மலர்ச்சி; தமிழின் மலர்ச்சியே தமிழரின் மலர்ச்சி; மொழியும் வாழ்வும் ஒரு காசின் இரு புறங்கள் போன்றன. ஆதலின் இன்பத் தமிழை வளர்ப்போம்; இனிய வாழ்வினைப் பெறுவோம்!"

— பேராசிரியர் **சி. இலக்குவனார்**

எழுச்சிதரும் எங்கள் இலக்குவப்பே ராசான்
மொழிமானம் காத்த முரசு.

*இலக்குவப் பெரியீரே! இலட்சியப் பெருந்தகையீர்!*
*நலமிக்க சான்றோரே! நலுந்தமிழர் தலை மகனே!*
*மலரானாய் மணமானோம் முத்தானாய் மரியானோம்*
*விளக்கானாய் ஒளியானோம்! விறகானாய் நெருப்பானோம்!*

- செஞ்சொற்புலவர் பாவலர் **சங்கரலிங்கம்**



# பண்டாரகர் சி. இலக்குவனார் ஒரு மேதகை

இலக்குவனாரும் யானும் ஆறாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை அரசர் மடத்திலும் ஒறுத்தவன் நாட்டிலும் உடன் பயின்றோம்.

பதினோராம் வகுப்பு தேறியபின் இலக்குவனார் திருஐயாறு புலவர் கல்லூரியில் சேர்ந்து தமிழ்ப்புலமை பெற்று நன்னிலம் உயர்பள்ளியில் தமிழாசிரியர் ஆனார். பின்னர் தனியே பயின்று முதுகலை மெய்யறிவு முதுகலைப் பட்டங்கள் பெற்றார். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியரானார்.

தொல்காப்பியத்தை ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்தார். அதனாற் பண்டாரகர் (பிஎச்.டி..) பட்டம் பெற்றார்.

விருதுநகர் செந்தில்குமார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இலக்கியம் என்னும் ஒரு தமிழ் மாதிகை நடத்தினார்.

மதுரை, முகவை, திருநெல்வேலி மாவட்டங்களில் 1948-ல் தமிழ் மறுமலர்ச்சிச் சொற்பொழிவுகள் நடத்தினார்.

1948 பொங்கலன்று அவர் வதிந்த இல்லம் தீக்கொளுத்தப்பட்டது.

பின்னர் திருநெல்வேலியில் உள்ள மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர் (V.C.) பதவி பெற முயன்றார். அப்போது அது கிடைக்கவில்லை.

நாகர்கோயில் கல்லூரியில் பணியேற்றார்! மதுரை பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த திரு. மு.வ. ஓய்வு பெற்றார். அந்த இடத்தைத் தனக்குத் தருமாறு கலைஞரையும் பேராசிரியரையும் கண்டு கேட்டுவிட்டுத் திருத்துறைப் பூண்டிக்குப் போந்து என்னிடம் விவரம் கூறிவிட்டு மதுரைக்குச் சென்றார்.

போகும்பொழுது கால்விரலில் தொடுதோலால் ஏற்பட்ட புண்ணைக் காட்டிச் சென்றார். மதுரை திருநகர் சென்றதும் அப்புண் புரையோடி இராசாசி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுப் பண்டுவம் பார்த்தும், பயனளிக்காமல் அங்கேயே இறுதி மூச்சைவிட்டார். யார் யாருக்கோ உருவச் சிலையமைக்கும் தமிழக அரசு அவரை மறந்து விட்டது ஏனோ?

அவருடைய மக்களில், பர்.சி.இ. மறைமலை, சி.இ. திருவள்ளுவன் குறிப்பிடத்தக்கவர்.

*வளர்க அவர் தமிழ்ப்பணி!*
*வாழ்க இலக்குவனார் புகழ்!*

வி.பொ. பழனிவேலனார், எக்கல்

*நன்றி : 'கனிமொழி' புரட்டாசி 2031-செப்டம்பர் 2000*

# இதழாளர் இலக்குவனார்

## கட்டுரையில் ஒரு பகுதி

*பேராசிரியர் இலக்குவனார் தம் இதழ்கள் வாயிலாகப் பின்வருவனவற்றை வலியுறுத்தினார்.*

1. இனிய எளிய தமிழ் நடை
2. அயல்மொழிக் கலப்பால் தமிழ் நாட்டின் எல்லை சுருங்கியதை உணர்ந்து பிறமொழிக் கலப்பு இன்றியே எழுத வேண்டும்.
3. இந்தி முதன்மை தமிழுக்கே அழிவு. எப்பாடுபட்டேனும் இந்தி முதன்மையைத் தடுத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு மொழிக்கும் அதனதன் எழுத்தே உடலாகும். உடலாம் எழுத்தை அழித்த பின் உயிராம் மொழி வாழ்வது எங்ஙனம்? எனவே இந்திய மொழிகள் அனைத்தும் இந்தி மொழி என்பதாம் தேவநாகரியில் எழுதப்பட வேண்டும் என விதிக்கும் நடுவணரசின் முயற்சியை எப்பாடுபட்டேனும் தடுக்க வேண்டும்.
5. மக்களாட்சியில் கிளர்ச்சி என்பது நோய்க்கு மருந்து போன்றதாகும். ஆட்சியாளரின் பொறுப்பை உணர்வதற்குக் கிளர்ச்சிகள் தாம் கைகண்ட மருந்தாய் உலக முழுவதும் காணப் பெறுகிறது. எனவே கிளர்ச்சிகளுக்கு எதிராக அரசு அடக்குமுறையைப் பயன்படுத்தக் கூடாது. கிளர்ச்சிகளுக்கு காரணமானவற்றை நீக்க வேண்டும். அவ்வாறு நீக்க முன்வந்தால் கிளர்ச்சியாளர்கள் அரசின் உறுதிமொழிகளை ஏற்றுப் போராட்டங்களைக் கைவிட வேண்டும்.
6. வாழ்வியல் நூலாம் தொல்காப்பியத்தையும், வாழ்க்கை நெறி நூலாம் திருக்குறளையும் கண்களாகக் கொண்டு போற்றி முழுமையாய்ப் படித்துப் பின்பற்றி வாழ வேண்டும்.



7. சங்க இலக்கியக் காலம் நம் பொற்காலம். சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்ப வேண்டும்.
8. பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கூடாது. அனைத்துத் துறைகளிலும் அனைத்து நிலைகளிலும் தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.
9. தமிழ்ப் பெயரே சூட்ட வேண்டும். தமிழிலேயே எழுத வேண்டும். தமிழிலேயே பேச வேண்டும்.
10. ஆசியக் கூட்டரசு, உலகக் கூட்டரசு என்ற படிநிலைகள் வர வேண்டும். எனவே இந்தியா, இந்தியக் கூட்டரசாகத் திகழ வேண்டும். தன்னுரிமையுடைய மாநிலங்களின் கூட்டாக 'இந்தியக் கூட்டரசு நாடுகள்' என்ற வகையில் திகழ வேண்டும்.
11. நீதிமன்ற மொழியாகவும், அலுவல் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் அனைத்து நிலை மொழியாகவும் தமிழ் இருத்தல் வேண்டும்.
12. மூட நம்பிக்கைகளை ஒழித்துப் பகுத்தறிவோடு வாழ வேண்டும்.
13. வண்டமிழை வட்டார மொழி என்று கூறற்க.
14. தமிழர்க்குத் தேசிய மொழி தமிழேயாகும்.
15. நடுவணரசுடன் தமிழ் மக்கள் தமிழிலேயே தொடர்பு கொள்ள ஆவன செய்ய வேண்டும்.
16. வேண்டிய மொழிகளை விரும்பிக் கற்கலாம். ஆனால் இந்திதான் தேவை என்ற சூழலை உருவாக்கி விட்டு இந்தியைப் பெரும்பான்மையோர் விரும்பிக் கற்கிறார்கள் என்ற போர்வையில் இந்தியை இங்கே பயிற்றுவிக்கக் கூடாது.
17. செய்தியிதழ்கள் செந்நெறி போற்ற வேண்டும்.
18. தமிழை அழிவிலிருந்து மீட்க இதழ்கள் அயல்மொழிக் கலப்பின்றியே எழுத வேண்டும்.
19. செந்தமிழைக் காப்போர்க்கே தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.
20. ஒரு மொழி, ஒரு சமயம், ஒரே நாடு என்பன நம்மை அழிப்பன.